# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் 2019–ம் வருடம் பிப்ரவரி மாதம் 28–ம் தேதி காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## <u>பொருட்கள்</u>

1) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகனம் எண். TN75P9346 E-Comet வாகனத்தில் உள்ள 6 டயர் மற்றும் உதிரி டயர்–1 மொத்தம் 7– டயர்களும் மிகவும் தேய்ந்த நிலையில் உள்ளது. எனவே புதிய 7 டயர்கள் வாங்க உத்தேச செலவு தொகை ரூ.75000/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(அ2/1983/2018)

அ.கு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண்.1406</u>**

அனுமதிக்கப்படுகிறது.

2)இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண். TN74D -4151 கழிவு நீர் வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பித்து கொள்வதற்கு புதிய வேககட்டுப்பாட்டு கருவி பொருத்துவதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.6000/– மற்றும் மேற்படி வாகனத்திற்கு 01–08–2017 முதல் 31–07–2019 வரை உள்ள காலங்களுக்கு பசுமை வரி கட்டுவதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.1000/– னை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

(அ2/549/2009)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1407</u>**

அனுமதிக்கப்படுகிறது.

3)இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள முதிந்த கொசுக்களை ஒழிக்க செயல்படாத நிலையில் உள்ள சிறிய மற்றும் பெரிய புகை பரப்பும் இயந்திரம் 5 எண்ணங்கள் சரிசெய்வதற்கு உத்தேச செலவு தொகை ரூ.28600/- ஆகும். மேலும்

அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண். 15- ன் கீழ் சரி செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்/1951/2011/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1408</u>**

அனுமதிக்கப்படுகிறது.

4)பாராளு மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018/19-ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சி வாகை குளத்தாங்கரை அருகில் ரூ.6.00 மதிப்பீட்டில் கட்டும் பணிக்கு மாவட்ட ஆட்சியர் (ம) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ2/4720/2018, நாள் 7/01/2019-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பாவைக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.71/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1409</u>**

அனுமதிக்கப்படுகிறது.

5)'இந்நகராட்சிக்குட்பட்ட 21 வாடுகளிலும் 37 பொது சுகாதார பிரிவு துப்புரவு பணியாளர்கள் கொண்டு மட்கும் குப்பை மற்றும் மக்காத குக்கைகளை தள்ளுவண்டியில் பெற்று வரும் பொருட்டு மேற்படி பணியாளர்கள் பணிசுமையை குறைக்கும் வகையில் ரூ.14,40 இலட்சம் மதிப்பீட்டில் சிறிய மின கலத்துடன் இயங்கும் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் 8 எண்ணமும் (BOV) (ம) இலகுரக வாகனம் 1 எண்ணம் (LCV) /வாங்கவும் இந்நகர் மன்றத் எண் 1376, நாள் 02/11/2018 -ன் படி அனுமதிக்கப்பட்டு அதற்கான பிரேரணை தயார் செய்து நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 1191/P3/2019. நாள் 21/01/2019-ன்படி சிறிய மின்கலத்துடன் இயங்கும் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் (BOV) 5 எண்ணமும் ரூ.9,00 இலட்சம் செலவிலும், இலகுரக வாகனம் 2 எண்ணமும் ரூ.11.20 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு

| Sl.No. | Description | Nos | Rs/Lakhs |
|---|---|---|---|
| 1 | Battery Operater Vehicle | 5 Nos | 9.00 |
| 2. | Light Commercial Vehicle | 2 Nos | 11.20 |
| **GOI share** | **State Share** | **ULB Share** | **Total Estimate Amount** |
| 35% | 55% | 10% | 100% |
| BOV-3.15% | 4.95% | 0.90% | 9.00 Lakhs |
| LCV-3.92 | 3.92% | 6.16% | 11.20Lakhs |

மேற்படி நிதி பங்களிப்புடன் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண். 1098/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1410</u>**

அனுமதிக்கப்படுகிறது.

6)நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் 23/01/2019/ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி அலுவலக பணியாளர்களின் வருகை பதிவேட்டினை Bio Matric Attendance முறையில் பதிவு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி இந்நகராட்சி அலுவலக பணியாளகளின் தினசரி வருகையினை Bio Matric Attendance Machine நிறுவ ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.25000./- ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 121/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1411</u>**

அனுமதிக்கப்படுகிறது.

7)பத்மனாபபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தக்கலை பழைய பேருந்து நிலையம் அருகில் நகரபுல எண். பி8/180 உள்ள 9.750 சென்று இடத்தில் (ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றுதல் ) தமிழ்நாடு சட்டம் 1/1976) பிரிவு 5 உட்பிரிவு (1)ன் கீழான வெளியேற்றுதல் நடவடிக்கை பற்றிய விவரம் தினகரன் நாளிதழ் விளம்பரம் செய்தவகை KAL PUBLICATIONS(P)LTD-க்கு ரூ.4960/- செலவு தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மேற்படி செலவு தொகையை (4960) பொது நிதியில் இருந்து வழங்கலாம்.

(ந.க.எண். 6190/2000/TPI)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1412</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**8)** இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகன எண்.TN75Z- 9748-க்கு தகுதி சான்று புதுப்பித்துக் கொள்வதற்கான மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ. **1,00,000/–**க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–மன்றம் அனுமதி வழங்கலாம். மேற்படி தொகையை பொது நிதியில் இருந்து அனுமதிக்கலாம்.

(ந.க.எண். **948/2018/**அ**2)**

**<u>மன்றத் தீர்மானம் எண்.1413</u>**

அனுமதிக்கப்படுகிறது.

9) இந்நகராட்சிக்குட்பட்ட தக்கலை பேட்டை சந்தையில் உள்ள மேல் நிலை நீர்த் தேக்க குடிநீர் தொட்டியின் படிக்கட்டுகள் (ம) பத்மனாபபுரம் அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள மேல் நிலை குடிநீர் நீர்த் தேக்க தொட்டியின் படிக்கட்டுகள் சேதமடைந்துள்ளதால் அதனை சீர் செய்ய ரூ.36000/—ற்கு இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. பி. ராபின்சன் என்பவர் மூலம் நகராட்சி சட்டம் விதி எண். 15—ன் கீழ் செய்யவும் மேற்கண்ட செலவினத் தொகையை குடிநீர் விநியோக நிதியின் கீழ் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.132/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1414</u>**

அனுமதிக்கப்படுகிறது.

10) இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண். TN 74Z-2536 வாகனத்துக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு 27—12—2018—ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | K.S.S.S. ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் | 99960/— |
| 2. | A.R.K. ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் | 99860/— |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் வ.எண். 2—ல் காணும் A.R.K. ஆட்டோ மொபைல்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த A.R.K. ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி உடன் வேலை வழங்கலாம்.

அ.கு— மன்றம் அனுமதி வழங்கலாம்.

(அ2/3502/2016)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1415</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**11)** இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN 74W-0436-க்கு புதிய மின்கலபெட்டி வாங்குவதற்கு உத்தேச செலவு தொகை ரூ.7500/—னை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும், மேலும் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(அ2/2897/2009)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1416</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**12)** இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனம் எண். TN74B-4577—க்கு பழுது பணிகள் மேற்கொள்ள **05—02—2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| **வ.எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| **1.** | K.S.S.S. ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் | **44920/—** |
| **2.** | A.R.K ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் | **44620/—** |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 2ல் உள்ள A.R.K ஆட்டோமொபைல்ஸ் ,நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த A.R.K ஆட்டோமொபைல்ஸ், நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொண்டு வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1410/2017/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1417</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**13)** தூய்மை இந்தியா திட்டம் **2018—19** (ம) பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் **2018—19—ன்** கீழ் எடுத்துச் செய்யப்படவுள்ள வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை தினமலர் நாளிதழில் **06—02—2019** அன்று விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| **Date of Insertion** | **Size** | **Position** | **Rate Rs.** | **Amount Rs.** |
|---|---|---|---|---|
| 06-02-2019 | 17 x 12<br>204 sq.cm | 13 | 53.00 | 10,812.00 |
| | | CGST @ 2.5% | - | 270.30 |
| | | SGST @ 2.5%<br>CAdd GSt 5% | - | 270.30 |
| | | Total | | 540.60 |
| | | | | =11,353.00 |

மேற்கண்ட பட்டியல் தொகையினை தினமலர் நாளிதழ், நாகர்கோவில் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1098/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1418</u>**

அனுமதிக்கப்படுகிறது.

14)இந்நகராட்சியில் தெருவிளக்கு உதிரி பாகங்கள் விநியோகம் செய்ய 22–01–2019 அன்று இரு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் இரு நிறுவனங்களும் (M/s. Revathi Traders (ம) Velmurugan Agencies) மதிப்பீட்டினை விட மிக அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் (58.44% அதிகம் (ம) 59.81%) மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 2122/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1419</u>**

அனுமதிக்கப்படுகிறது.

15)இந்நகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாக கடைகள் குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டு 9 ஆண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு மறுஏலம் /ஒப்பந்தப்புள்ளி 14–02–2018–ம் தேதியில் கோரப்பட்டு உயர்ந்தபட்ச ஏலம்/ஒப்பந்தப்புள்ளி ஒப்படைக்கப்பட்ட நபர்கள் அவர்கள் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகையில் 12 மாத வாடகை முன்பணமாக நகராட்சியில் செலுத்த கோரி 2018–2019–ம் ஆண்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் படி 17–12–2018–ம் தேதி அறிவிப்பும் 07–01–2019 அன்று இறுதி அறிவிப்பும் அனுப்பப்பட்டும் கீழ்காணும் கடைகளுக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிய நபர்கள் 12 மாத வாடகை தொகையினை முன் பணமாக நாளது தேதிவரையிலும் செலுத்தப்படவில்லை.

**<u>1)காமராஜர் பேருந்து நிலைய கடைகள்.</u>**

கடை எண்– 3, 6, 7,9, 13 ,25

**<u>IUDP கடை எண்–5.</u>**

மேற்படி கடைகளுக்கு 12 மாத வாடகை தொகையினை முன்பணமாக அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள இரண்டு முறை அறிவிப்பு அனுப்பியும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியவர்கள் 12 மாத வாடகை வைப்பு தொகையாக செலுத்தவில்லை. எனவே மேற்படி கடைகளுக்கு செலுத்தப்பட்டுள்ள வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்தும், அந்த கடைகளுக்கு மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண். 180/2018/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1420</u>**

அனுமதிக்கப்படுகிறது.

16)இந்நகராட்சிக்குச் சொந்தமான தக்கலை பேட்டை சந்தைக்கு அருகில் உள்ள மீன் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் அனுபவ உரிமைக்கு 2018–2019–ம் ஆண்டுக்கு 14–02–2019 அன்று 8–வது முறையாக மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்துக் கொள்ள வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளிகள் எவரும் ஒப்படைக்கவில்லை. ஏல நடவடிக்கை விபரம்

| வ.எண். | பெயர் (ம) முகவரி | ஏல கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருமதி. ஷெப்ரின்ஸன் ப்ளோறா வி.ரே<br>க/பெ. ஆன்றனி பெர்டி<br>19/22 மார்க்கெட் ரோடு<br>தக்கலை. | 1,85,000/– |
| 2. | திரு. லாறன்ஸ் பிதேலிஸ்<br>த/பெ. பிதெலிஸ்<br>17–2எப்–1 அயனிவிளை,<br>கருங்கல், விளவங்கோடு | 1,84,000/– |

மேற்படி கோரப்பட்ட இரண்டு ஏலகேள்விகளில் வரிசை எண். 1–ல் காணும் திருமதி. ஷெப்ரின்ஸன் ப்ளோறா என்பரின் ஏலகேள்வி ரூ.1,85,000/– என்பது உயர்ந்த பட்ச ஏல கேள்வியாகும். (2017–2018) கடந்த ஆண்டு தொகை ரூ.1,87,425/– ஆகும். மூன்றாண்டு சராசரி தொகை ரூ.1,78,642/– ஆகும். மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1981/2017/அ1)

**மன்றத் தீர்மானம் எண்.1421**

அனுமதிக்கப்படுகிறது.

17) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகனம் எண். TN74Z2536-க்கு 6 டயர் மற்றும் 1 உதிரி டயர் உட்பட 7 டயர்களும் மிகவும் தேய்ந்த நிலையில் காணப்படுவதால் புதிய 7 டயர்கள் வாங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.58600/– ஆகும். மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1256/2013/அ2)

**மன்றத் தீர்மானம் எண்.1422**

அனுமதிக்கப்படுகிறது.

18)இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN 74W-0436-க்கு புதிய மின் பேட்டரி வாங்க 11–01–2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளி வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | MOFI<br>Battery & Auto<br>Electrical works<br>Marthandam | 5600/– |
| 2 | Exide<br>Authorised Dealesr<br>Thuckalay | 5300/– |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 2–ல் உள்ள Exide Authorised Dealers Thuckalay நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி அளித்த Exide Authorised Dealers தக்கலை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று அவசர அவசியம் கருதி ஒரு இனத்திற்கு மட்டும் விநியோக உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

(அ2/2897/2009)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1423</u>**

அனுமதிக்கப்படுகிறது.

19) பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சி வாகை குளத்தாங்கரை அருகில் கலையரங்கம் கட்டும் பணிக்கு ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய 15–02–2019 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்த்ப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டினை விட (சதவீதம்) | |
|---|---|---|---|
| | | அதிகம் | குறைவு |
| 1. | திரு.என். ராமதாஸ்<br>656, மூலச்சல் | – | 0.10% |
| 2. | திரு. சி. வில்சன்<br>நட்டாலம் | 0.28 | – |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. என். ராமதாஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

(ந.க.எண். 71/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1424</u>**

அனுமதிக்கப்படுகிறது.

20) இந்நகராட்சியில் தெரு விளக்கு உதிரிபாகங்கள் விநியோகம் செய்ய 28–02–2019 அன்று 2–வது முறையாக மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | நிறுவனதாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் | |
|---|---|---|---|
| | | அதிகம் | குறைவு |
| 1. | ONS Electrical Enterprises<br>Trichy | – | 1.15 % |
| 2. | V.V. Traders<br>Trichy | 1.66 % | – |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகித்தைவிட குறைவாக சதவீதத்தில் கொடுத்துள்ள ONS Electrical Enterprises, Trichy நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 2122/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1425</u>**

அனுமதிக்கப்படுகிறது.

ஒப்பம்/–(எஸ். மூர்த்தி)
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.